



ஓலை 96| ஓசை 219| நவம்பர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**பல்லார் முனியப் பயனில சொல்லுவான்**
**எல்லாரும் எள்ளப் படும்**

## பொருள்

**கேட்டவர் பலரும் வெறுக்கும்படியாகப் பயனில்லாத சொற்களைச் சொல்லுகின்றவன், எல்லாராலும் இகழப்படுவான்**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**

**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## அஃகமும் காசுஞ் சிக்கெனத் தேடு!

## எண்சீர் மண்டிலம்




வானீயும் மழைநீரை வாரியேதான் கடலில்
வகையாக சேரவிட்டு சிக்கனத்தை விட்டால்
வானீந்த அமுதத்தில் வயல்நிலமும் விளைய
வழியேது? பஞ்சமது தீர்வதேது? #தவசம்
ஊனீற்கே உண்பதற்கு உதவலேது? வயலும்
உதவாமல் நாடுந்தான் நசிந்தேதான் வறுமை
தானீன்ற பஞ்சத்தால் மாய்ந்திடுமே என்று
தண்ணீரைச் சேமித்தல் தலையாயக் கடமை!

நாளெல்லாம் பாடுபட்டு நல்லுடலைக் கெடுத்தே
நஞ்சான மதுகுடித்தே செலவழித்தால் குடும்பம்
நாளெல்லாம் பட்டினியில் நைந்தேபோ காதா?
நடுத்தெருவே வீடென்று வீழ்ந்துகிடப்பதுவோ?
கோளெல்லாம் சேமித்தே வானுலகம் வைத்தே
குலையாமல் நிலைப்பதுபோல் நிலைவாழ்வு வேண்டி
வாளெடுத்துப் போரிட்டே வையத்தார் வாழ
வகையாகச் சிக்கனத்தைக் கைகொள்ளல் வேண்டும்!




மூக்கிற்கும் சிக்கனமாய் மூச்சிழுத்து விட்டால்,
மூச்சிற்கோ திணறலேது? என்பதைப்போல் ஆய்ந்து
நாக்கிற்கும் சிக்கனமாய்ப் பேசுதலே துண்டாய்
நாக்கறுந்து போகாமல் காக்கவழி வாய்க்கும்;
வாக்கினையும் சிக்கனமாய் பேசாமல் விட்டால்
வாக்கினிலே மாட்டியேதான் துடிக்கின்ற நிலையே
ஆக்கமாகும் என்றுணர்ந்தே எதிலுந்தான் அளவாய்
அளந்துவைத்துப் பயன்படுத்த வாழ்வேதான் சிறக்கும்!

# தவசம் - தானியம்.

இலக்கணக் குறிப்பு: எண்சீர் மண்டிலம்

நான்கடிகள், எட்டு வரிகளாக வரும். நான்கடியும் ஓரெதுகை பெற்று வரும்.
அடி தோறும் முதல் சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை அமையும்.
காய்+காய்+காய்+மா ஆகிய சீர்கள் அரையடி தோறும் வரும்,
வரியென்பது அரையடியென்று கணக்கிடல் வேண்டும்.

# மலர்களின் மாண்பு

## இன்னிசை பஃறொடை வெண்பா

**மலர்களின் புன்னகையில் மக்கள் மகிழ்தல்
நலத்துடன் வாழ நறுமணம் வீசும்.
தலத்திலே பூக்கும் தளவமோ வெண்மை
கலங்கிய நீரில் கலசமே கஞ்சம்
அலர்ந்திடும் அந்தியிலே அல்லியும் அன்றோ
மலர்களைக் காணலே மாண்பு.**



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# தையலைப் போற்று

## பா வகை: கழி நெடிலடி ஆசிரியப் பன்னிரு சீர் மண்டிலம்

பா வகைக்கான வாய்பாடு:
*விளம்+ மா+ விளம்+ மா+
மா+காய்+ விளம்+ மா+
விளம்+ மா+ மா+ காய்*



விளக்கினைப் போன்றே வெளிச்சமும் தந்தே
வியப்பைத் தருவாளே!
விழைந்துமே வீழும் மழைத்துளி போன்றே
விழைவாள் வாழ்வளிக்க!
வளமையும் பெற்றே வாழ்வினில் சிறக்க
வலியும் தாங்கிடுவாள்!
வாழ்வியல் இனிக்க வண்ணமும் கொள்ள
வருவாள் அருளாக!
இளகியே மனத்தால் என்றுமே அன்பால்
இல்லம் நிறைத்திடுவாள்!
இருளையே அகற்றும் இன்னொளி இவளே
இதையே ஏற்றிடுவாய்!
இளமையும் முதுமை என்றுமே துணையாய்
இறுகப் பற்றிடுவாள்!
இதையுமே ஏற்றே வாழ்விலே பெண்ணை
ஏற்பாய் வானாக!

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# யாரேனும் ஒருவர்

சிறிது
தூரத்திற்குப்பின்
என் பயணம்
நிறைவடையலாம்.

வானில் வலம்
வந்த சூரியன் அந்தியில்
மொத்தமாய்
அடிவானில் மறையலாம்.



தன் தேடலை
முடித்தப் பறவைகள்
இனிதே
கூடு திரும்பலாம்.

இக் கவிதை
வாசிக்கப்படாமல்
சிலர்
கடந்து போகலாம்.

உங்களில்
யாரேனும் ஒருவர்
இதே கவிதையை எழுதி
முடித்திருக்கலாம்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# நட்பாராய்தல்

## அதிகாரம் : 80

தெளிந்தாய்ந்து நட்பாடல்
கேடில்லா நட்பினழகாம்.
ஆராயாநட்பின் கேடினின்று
விடுதலை இல்லையாம்.

நட்பின் நற்குணமறியாது
நட்பாடல் கொளிலது.
அவர்க்கே சாக்காலந்தரும்
காரணமாகுமாம் முடிவில்.

தோழனின் குணத்துடன்
குடிச்சிறப்பும் குற்றங்குறையும்.
தோழமையின் நிலைத்தன்மையும்
ஆய்ந்தநட்பாடல் நலமாம்.

உயர்குடியோனும் பழிக்கஞ்சுவோனும்
ஆகிய நற்குணத்தோனை.
பெரும்பணம் கொடுத்தேனும்
நட்பாடல் கொளல்நலம்.

தீமைக்கு இடித்துரைத்தும்
திரும்பச்செய்யாது தடுத்தும்.
உலகநடையறிய வல்லோனுடன்
நட்பாடல் கொளல்நலமாம்.

கேடுவருமிடத்தும் நன்மையாதெனின்
ஓடிவந்துதவும் நட்பை.
கண்டறியத்தக்க வாய்ப்பை
தரும் அளவுகோலதுவாம்.




அறிவிலாதோருடன் கொண்ட
நட்பாடல் நீங்கி.
அவரைக் கைவிடலே
ஒருவர்க்கு நற்பேறாம்.

தோழன்குறித்த அவநம்பிக்கை
எண்ணந் தவிர்த்தலும்.
துன்பநேரம் கைவிடுவோனின்
நட்புதவிர்த்தலும் நலமாம்.

கேட்டின்காலத்து கைவிட்டோடும்
நட்பால் ஒருவனுக்கு.
சாக்காலத்துமந் நினைவுகள்
உள்ளம் வெந்தெரியும்.

குற்றமற்ற நல்லோர்நட்பை
கொளல் நலம்.
ஒத்தபண்பிலார் நட்பை
எதைக்கொடுத்தும் விடல்நலம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# பசுமை நிறைந்த பாரதம்

பசுமை நிறைந்த பாரதம்
பரந்து விரிந்தே
கண்ணில் தெரியும்
காட்சியெல்லாம்.



பாலைவனத்தையும்
பசுஞ்சோலையாய்
உருவெடுக்கச் செய்திடுவோம்.
குளங்களும் குட்டைகளும்
தூர் வாரியே.

பாருக்குள்ளே பாரதம்
பசுமையாய் கண்டிடுவோமே.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# ஓ பணமே!

என்னை தேடி நீ வந்தால்
என் தேவை அனைத்தும் பூர்த்தி செய்ய முடியுமே.

தேவைப்படும் பொழுது நீ வரவேண்டும் பணமே
அது போதும் எனக்கு.

நான் உனக்காக காத்திருக்கிறேன்
உன்னை காதலிக்கிறேன்

என்னிடம் வந்தால்
அன்போடு இணைத்து இருவரும் பயணிப்போமா!


உனக்காக ஒவ்வொரு நொடியும் காத்திருக்கிறேன்
என் காதலியே வரும் வழியை பார்த்து விழித்து நிற்கிறேன்!
நீ வருவாய் என!

நன்றி இறைவா



கவிஞர் ஜெ. தேவி ராஜசேகர், சென்னை, செங்கல்பட்டு மாவட்டம்

## திருத்தக்கத் தேவர் (ஆசிரியர் குறிப்பு )



இவர் இளமையில் துறவு பூண்டவர்
தேவர் பெயர் இவருக்கே உரித்தானது
எவரும் போற்றும் சமண சமயத்தவர்
இவருடைய காலம் தொன்மையானது

அன்பு அருள் வாய்மை, அடக்கம்
என்ற நற்பண்புகளைக் கொண்டவர்
துன்பங்களைக் கடந்த துறவி இவர்
வன்மம் அறியாமல் அறம் வளர்த்தார்

சோழர் குலத்தில் பிறந்தவர் இவர்
வாழும் கலையை கற்றுத் தேர்ந்தவர்
பொய்யாமொழி புலவர் இவர் ஆசான்
வாழும் கலையை இவரிடமே கற்றார்

எள்ளி நகையாடும் சங்கப் புலவர்கள்
தள்ளி வைத்தே பேசினர் எப்பொழுதும்
"பள்ளிக்கணக்கன் காதல் அறியான்
கிள்ளை போல் சொன்னதைச் சொல்வான்."
(பள்ளிக்கணக்கன் : சிறுவன் )

பெண் வாசனை அற்ற துறவி
கண் பேசும் காதலை அறியான்
பண்டகன், காமம் என்றால் என்ன
எண்ணியபடி உணர்வு அற்றமரம்
( பண்டகன் : அலி )

ஓடும் நரியைப் பாரத்தீரே பாடும்
கூடி இருந்தவர் சவால் விட்டனர்
நாடிப் பாடினார் நரி விருத்தம்
பாடிய பாடலைப் புகழ்ந்தார் ஆசிரியர்

காதலும் காமமும் சொட்ட சொட்ட
பாதகம் இல்லாமல் எட்டே நாளில்
சாதித்த படைப்பு காவியம் ஆனது
வீதியில் ஓடினர் மற்ற புலவர்கள்

மன்னன் அவையில் நூல் அரங்கேற்றம்
தென்னவன் பாண்டியன் முன்னிலையில்
"இன்னது பாடுதல் யாவர்க்கும் அரிது
சொன்னதை மெய்ப்பித்தார் தேவர்


விருத்த பாடல்பெரும் காப்பியமானது
அறம் பொருள் இன்பம் வீடு
அருமையான காப்பிய நலங்கள் அடங்கியது
வரும் காலங்களில் நிலைத்து நிற்கும்

காப்பியத்தின் உட் பிரிவு இலம்பகம்
இப்பிரிவு இந்நூலில் மட்டுமே காணலாம்
கம்பர் போன்றோர்க்கு கலங்கரை விளக்கமாகும்
இந்நூலைக் கல்லாதவர் கல்லாதவரே ஆவார்.

தொடரும் ...

கவிஞர் ந. திருக்காமு

உன்னிடத்தில் வந்து
அழத்தோன்றும்தான்
புலம்ப தோன்றும்தான்
எனக்காக இரு என்று தான்
கதறவும் தோன்றும்தான்
அதற்கான இத்தை
நீ தராமல்
நீ தராமல்
நான் எப்படி உள்னிடமிருந்து
தட்டி பறிக்க முடியு மென்ற.
உண்மையை உணர்ந்து
அமைதியாய் இருந்து விருவேன்.



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# (கை)கூடா நட்பு

இழுக்கினை உருவாக்கி இழுத்துப்பிடித்து
ஊதிப்பெரிதாக்கும் இயல்பு

பஸ்பமாய் இல்லாதெரிந்தொழியும்
என் பெறுமானங்கள்

கண்டால் கனிவாயும் காணாவிடில்
எரிவாகவும் உன் கண்கள்

கர்வத்தின் சாத்தானுடன் எப்போதும் கலந்துபோன
உன் சம்பாஷணைகள்

நெகிழ்வின் உச்சத்தில் நெருங்க நெருங்க
பகையின் பெருங்காதலை வளர்க்கும் உன்னிதயம்

எனது மகிழ்ச்சி உனக்குப் பிடிக்காத
விஷம் தடவிய விஷயம்

எனது வெற்றியில் உனது பொறாமை வலையின்
வீச்சம் படரும்

துளியும் நான் உவகை பெறக்கூடாதென்பதில்
மெத்தக்கவனமாய் நீ

எனது அடைவு உன்னிடம்
எடுபடாத ஏடாகூட இளப்பம்

உன் சம்பந்தப்பட்டவை யாவுமே மரணவாயில் கொண்டு
இரகசியமாய்த் தாளிடப்பட்டவை

அதுசரி,
எப்படி நாம் இதுவரையில்
நண்பர்களாயிருந்தோம்?



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# பெருவழுதி படை

தெவ்வர் செருக்கு வீழ்த்த
தென்னவன் களம் புகுந்தான்
களம் அதிர அலறும் கூளியர்
பகை வீழ்த்தி வாகை சூடும்
பெருவழுதி படை.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# கிராமிய கீதம்

## சேத்து வயக்காட்டுக்குள்ள நாத்துநடும் சின்னபுள்ள



மாமனோடமயிலு என்னைத்
தேடுதுன்னு சொன்னாங்க

ஆசையிலதான் நாஓடி
வந்தேனே கண்ணே

ஒம்முகம் கண்டதுமே
களைப்பெல்லாம் போயிடிச்சே

அம்சமாத்தான் நீயிருக்கே
தாமரையாட்டம் பூத்திருக்கே

சேத்து வயக்காட்டுக்குள்ள
நாத்துநடும் சின்னபுள்ள

கன்னமெல்லாம் செவந்திருக்கிறே
நெஞ்சுக்குள்ள நெறஞ்சிருக்கே

ஒத்தாசையா நாவாரேன்
அனுசரணையா கூடயிருக்கேன்

ஒண்ணாத்தான் ஒழைச்சிடலாம்
காசுபணம் சேர்த்திடலாம்

உச்சிவெயிலு ஏறுதே
வியர்வையது வருகுதே

காலுகைய்யி அலம்பித்தான்
கஞ்சியத்தான் குடிச்சிடுவோம்

வேப்பமர நெழலுல
செத்தச் சாஞ்சிக்குவோம்

மனசாரப் பழகுவோம்
சந்தோசமாப் பேசுவோம்

அச்சம் ஒனக்கெதுக்கு
அந்நியன் நானில்லையே

அழகான வண்ணக்கிளியே
வெக்கம்தான் வருகுதா

பரிசம் போட்டுதான்
பந்தகாலு நட்டுறேனே

கண்ணாலம் கட்டிக்கிறேன்
கண்கலங்காம பாத்துக்கிறேன்.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# நீயின்றி நானில்லை

நிலவின்றி வானில்லை
நிலமின்றி மரமுமில்லை
வண்ணமின்றி வானவில்லில்லை
வரவின்றி செலவுமில்லை

முகிலின்றி மழையில்லை
முதலின்றி முடிவுமில்லை
இதழ்களின்றி மலர்களில்லை
இதயமின்றி உறவுமில்லை



கண்களின்றி பார்வையில்லை
கருவின்றி குழந்தையுமில்லை
தாயின்றி சேயில்லை
தாளமின்றி ராகமுமில்லை

படையின்றிப் போரில்லை
பல்லின்றி சொல்லுமில்லை
வேரின்றி விருட்சமில்லை
வேடமின்றி நாடகமுமில்லை

இரவின்றி பகலில்லை
இதயமின்றி அன்புமில்லை
பாசமின்றி நேசமில்லை
பார்ப்பதெல்லாம் காட்சியுமில்லை

நீரின்றி மீனில்லை
நீயின்றி நானுமில்லை

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆயிஷா, கம்பளை

# நினைவுகளின் வீச்சு

விண்ணேகியோர் நிலை யாம் அறியோம்.
மண்ணில் தங்குவர்கட்கு
விண்ணேகியோர்
நினைவு ஒரு தாக்கம்தான்.

சில நேரம் இன்பம்,
சில நேரம் துன்பம்,
பிறிவாற்றாமையின் துன்பியல் என்று
எப்போதும் கொள்ளல் ஆகுமா?.
இன்பியலும் அல்ல.
நினைவுகளின் தாக்கம்.



இருந்தபோது செய்த செயல்,
சொன்ன சொல்
ஒரு வித்து.
விளைந்த வித்து
ஆலாய், அரசாய் பெருகி நிற்க;

நினைவுகள்
இன்பமும்,துன்பமும்
கலந்தே தரும் ஒரு அவதி.

பெற்ற நன்மைகள்
நன்றியுடன், நினைவில்
தெள்ளிய நீர் ஊற்று அனைய.

செய் தீமைகள்
எஞ்ஞான்றும் மறக்கப் படமாட்டா.
செய் பாதகம் என்றும் மறக்கப் படமாட்டா.

மண்ணில் துஞ்சும்வரை
எவரும் மாமனிதன் அல்ல.
பட்டினத்தார் அல்ல;
பேய்க்கரும்பு இனித்திட..

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# மனிதன் ஒரு முட்டாள்

தோகை விரித்து
ஆண் மயிலே
அழகியாய் ஆடும்
பெண் மயிலை கவர

இனிமையான குரலில்
ஆண் குயிலே பாடும்
பெண் குயிலை மயக்க

மனிதன் மட்டுமே
பெண்ணினத்தை
மட்டம் தட்டி மட்டமானான்

பெண்ணை
அடிமையாக்கி
தானும் அந்நியருக்கு
அடிமையானான்



உன் வீட்டில் பெண்
கைதியானாள் எனில்
நீ கைதியாவாய்
உலகத்தில்

காரணம்
இயற்கை
விரும்புவதில்லை
பெண் அடிமைதனத்தை

கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# அவள்

விடிந்ததும் விடியாத காலைப் பொழுது
மார்கழிப் பனியில்
சிலிர்க்கும் மலர்கள்!
கால் தடவிப் போகும் அலைகள்
நட்சத்திர சரத்தை சூடி
மிளிரும் பூமி!
வானில் மிதந்து வரும் வெண்ணிலவு!
மேனி தழுவும் பூங்காற்று!
சலசலத்து ஓடும் ஆறு
மூங்கிலிலே நுழைந்து
ரீங்காரமிடும் காற்று!
வானில் ஆரமாய் வளையும்
வண்ணமயமான வானவில்!
பூமியின் மொத்த அழகும்
தோற்றுப் போகும்
அவள் முன்னே!




கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# காதலை விதை

ஊடல்கள் இல்லை கூடலும் இல்லை
நேசம் தொட்டு நீசென்ற. நாளிகளிலிருந்தே
உன்நினைப்புகளில் வாழ்கிறேன் அல்லியோடு ஆளானேன்.
புள்ளி வைத்து கோலமிடும் பூவானேன்.
****

நெல்லும் சொல்லும் ஒன்றுதான்
விதை ஒன்று போட செடியொன்றா முளைக்கும்
அன்பை விதை
பண்பை விதை
நேசம் கொடு
பாசம் வளரும்
காதலை விதை கனியமுதினை சுவை.



கவிஞர் சு. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

# தனிமை



உறவுகளால் ஊக்கம்பெறும்
நிலையற்ற உலகினில்.
உரிமையுடன் பேசிக்கொள்ளும்
இதயங்கள் உன்னதமானவை

வையகப் படைப்பொழுங்கில்
தனிமைகள் காணோம்.
தவிப்புகள் எங்கும்
தொடர்வதும் அரிதே

நேரும் மறையும்
இணைவது போலே.
நெஞ்சம் நிறையும்
நேரமும் அதுவாய்

ஆணும் பெண்ணும்
அன்பினில் நனைந்திட
அவனியை ஆளும்
அழகிய தோற்றம்

பிறவியில் துளிரும்
ஒற்றை மரமோ
சுற்றங்கள் தேடி
அலைவதும் இல்லை

ஊடலும் கூடலும்
நிரம்பிய வாழ்வில்
தனிமையின் இரசனைகள்
இன்பமாய் இனிக்கும்

கற்பனை கடந்து
சிந்தனை சீர்பெற
சாலையின் ஓரமாய்
தனித்தே நடந்திடு

ஒதுக்கிடும் கணங்களில்
தோழனாய் தோள்கொடுக்கும்
நிம்மதி அலையாய்
மனதினை வருடுமே

மனித மொழிகளால்
மீறப்பட்ட கீறல்களுக்கு.
மௌனித்த தனிமை
காயங்கள் ஆற்றும்

சிந்தனைச் சிதறல்களில்
சிதைந்திடும்
மூளைக்கு.
ஆய்வினை நோக்கி
அழைப்பும் விடுப்பது
தனிமையே

கவிஞர் சேஹு மொஹம்மது பௌஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ.

# வானொலி

அறிவியலின் அன்றைய
அழகான அகங்காரம்

அன்று அனைவரின் காதுகளில்
பல்சுவை கவசமாய்

அன்றைய தலைமுறையின்
பண்பலை உறவின் முறையாய்

வீட்டின் வரவேற்பறையில்
குடும்ப உறுப்பினராய்

செய்திகள் வாசிப்பது என்ற
குரலுக்கு தமிழே அடிமையாய்




தெளிவான பாடல்களின்
தித்திக்கும் வரிகளாய்

விழாக்காலங்களில் முக்கிய
விருந்தினராய்

வீடுதோறும் ஏழைகளின்
விலைமதிப்பற்ற விருந்தாளியாய்

இன்றைய இணைய உலகில்
உடைந்து போன நினைவுகளாய்
வானொலி

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# பொங்கிடு மனமே

பொங்கிடு மனமே
பொறுமை கொள் சினமே
கேள்விகள் வருவதெல்லாம் ஏக்கத்தின் தனமே
உற்றிடு மெய்யென
உண்மை பொருள் பெறுமே

சாத்திரங்கள் புரட்டுவதும்
பொய்சாதிகள் புனைவதும்.
சதிகள் பல செய்வதும்
மாந்தர்க்கு மாட்சியாம்



பழிகள் பல சுமந்தேனும்
பக்குவமாய் பெற்ற மகள்
பருவத்தின் பதம் காண
மனங்கொள் மணாளனை கரம் பிடிக்க
சாதி எனும் சலனம் எமை பிடிக்க
பல நாள் பாலகி அவள்
பழுதற்ற பங்கயம் அவள்
சாதிகள் எனும் சாக்கடைக்கு கொன்று பலியாக்கலாமோ

பகுத்தறிவு என்று சொல்லி
பட்டம் பல பெற்றிடுவார்
பதிகம் பல இயம்பிடுவார்
படு குழி ஒன்று தோண்டிடுவார்
பெற்றார் தன் உற்றாரென எண்ணாமல்
அநாதை இல்லந்தனில் சேர்த்திடுவார்
கேட்டால் நன்மைக்கே என உரைத்திடுவார்

தோழனாய் எம்மோடு
தோல் கொடுப்பான் என நினைந்தேன்
பாங்கனாய் அருகிருத்து
பகைவனாய்மாறிப்போனான்
கறையான் புற்று தனில்.
அரவம் பற்று கொள்ளும் தன்மை போல்
ஆசை தனை வேரறுத்து; பேராசை தனை உருக்கொடுத்து
உற்றிடும் உயிர்கொல்லி மருந்து என
உறவுதனை உருக்குலைந்த விதந்தனை யாருக்கு நான் உரைக்க.


ஆதலால் அன்புடை நெஞ்சமே
அநீதி அநீதி என நீதியை நிர்மூலமாக்கும்
நிலை கண்டும் பொங்காமல் இருப்பது
முறையாகுமோ.

தங்கிடும் கோவங்களை
கோபுரமாய் மாற்றி
கோதல் செய் பேதையாக
செங்கோல் தனை நாட்ட வீறுகொண்டு
பொங்கிடு மனமே; பொங்கிடு;
பொறுக்கும் வரை பொங்கிடு!

கவிஞர் பி. வூட்ஷன், முல்லைத்தீவு (இலங்கை)

# குறளோவியத்தின் தூரிகையே!

கலைஞரின் கைவண்ணத்தில் உருவானது குறளோவியம்
படிக்க படிக்க சுவைக் குன்றாது
குறளுக்கு சித்திரமாக அழகு சேர்த்தது
உடல் சோர்வுக்கும் உளச் சோர்வுக்கும்
நோய் தீர்க்கும் அருமருந்தாய் அமைந்தது
பெரியாரையும் அண்ணாவையும் அழகுற எழுதினாரே
தலைமகள் மருத்துவம் பயின்றாலும்
அன்னை தன் மகளை அழைக்க
அதைக் காட்ட எழுதிய அற்புதமான
தூரிகையின் தீட்டலே குறளோவியம்
எண்ணற்ற கருத்துக்கள் அடங்கிய காலச்சுவடு
கணவன் மனைவி பகுத்தறிவுச் சிந்தனையும்
அறுசுவையின் மூலம் அழகுறப் படைத்தாரே
ஒவ்வொரு குறளுக்கான
விளக்கமும் மெய்சிலிர்த்தது
இன்பத்தில் அமைதி கண்டு துன்பத்தை
தாங்கிக் கொள்ளும் மனப்
பக்குவத்தையும் சொன்னாரே
குறளோவியம் சுவைக் குன்றாத ஓவியம்
தூரிகையின் தூரரில் வந்து காற்றோடு
கலந்து உயிர் மூச்சாய் நின்ற
காலத்திற்கும் மறக்க முடியாத காவியம்




கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# விலை போகின்றன

ஓடியாடியும்
தேடிப் பிடித்தும்
ஊஞ்சலாடியும்
பேயாடியபடி
கனிபறித்தும்
ஒண்டுக்குடிசைக்கென
கிளை ஒடித்தும்
ஓயாத நோய்க்கு
பச்சிலை அரைத்தும்
மேகத்திரையின் கிழிசலுக்கு
போர்வையாகியும்
தூர வெயிலின் காரத்திற்கு
இளைப்பாற்றும் தாயுமென
எழுந்து நின்ற மரத்திற்கு
சமாதி கட்டி
விலை போகின்றன
வில்லாக்களும்
கார்டன்களும்.



கவிஞர் இளையவன் சிவா

# எங்கள் சுதந்திரம் வாழியவே



அடிமை மூழ்கிய
ஆழியின் பேரலை
விழுமி எழுந்ததே
வீணர்கள் விழ்ந்திட

அடிமை கைவிளங்கு
ஆண்டுகளாய் கிடக்குமே
உடைக்க எழுந்திடு
ஊழ்பகை வென்றிடு

கைத்தடியில் அகப்பட்டு
கைவிளங்கு உடைந்திடுமோ.
சத்தமின்றி ரத்தமின்றி
சரித்திரத்தில் நுழைந்திடுமோ.

தடிக்கொண்டு ஓடவில்லை
தரங்கெட்ட ஆங்கிலேயனே.
வங்கத்தின் சிங்கத்திடம்
வகையாய் சிக்கிக்கொண்டு

சீழ்படிந்த அடிமைத்தனம்
சிதறடித்த காவலனே.
காலனிடம் அகப்படாத
கலங்கரை விளக்கமே

மாற்றத்தந்த நாயகனிடம்
மரணமே கெஞ்சிடுமே.
ஆயுதத்தை நீயெடுத்து
அரசனாய் நின்றாயே

காலனி ஆதிக்கத்தை
கால்தெறிக்க ஓட்டினாயே
புதியதோர் விடியலாய்
புதுவிரவில் பெற்றாயே.

சுதந்திர தாகமாய்
தனிந்திட்ட நெஞ்சத்தில்
வீரச் சுதந்திரம்
இந்தியரை பறைசாற்றுமே.

சிந்திய ரத்தத்தால்
செங்குருதியில் படர்ந்து
அன்பின் வெண்மையாய்
அகிலத்தில் பாய்ந்தோட

பசுமையின் சோலையிலே
பைங்கிளி சிறகடிக்க
தர்மத்தின் தேசமாய்
தரணியிலே பறந்தாயே.


கவிஞர் ஏ. தேவராஜ், சென்னை

யார் சமாதியோ
குடை பிடித்தபடி
மழைக்காளான்!



கவிஞர் லா. பெனிஷ், நெல்லை

வெட்டவெளி வானம் இல்ல
உன் வட்டமுகமே வானமம்மா
உன் சர்க்கரைத்தமிழ் கேட்கையில
இளவேனில் குளிருதம்மா
நீ பள்ளிக்கூடம் போயி
பிள்ளைத்தமிழ் படிக்க வேணும்
நீ கல்லூரி போயி
கலையெல்லாம் படிக்க வேணும்
வளர்ந்த பிறகு
வாரிவாரி கொடுக்க வேணும்
பாரி போல பாரினிலே நீயே
மகளே நீயே மகளே நீயே




கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# விரியும் சிறகுகள்

மெய்ப்பொருள் அறிய விரியும் சிறகு!
தன்னை அறிந்து
தனியாய் தவமிருந்து
உள்நோக்கி பயணிக்க விரியும் சிறகு!

கற்க கற்க கல்லாமை வெளிப்படும்!
அறியாதது எது? புரியாதது எது?
இயன்றது எது? இயலாதது எது?
இதுவே மெய்ஞானம்! இதுவே சிறகு!

மனதை அடக்க அடக்க மாயச்சிறகு முளைக்கும்!
நாவை அடக்க அடக்க நல்வழி பிறக்கும்!
பேரின்பப் பெருவழி செல்ல
விலக்கியதை ஒழிக்க ஒழுக்க சிறகு முளைக்கும்!

கேள்வி பிறக்க ஞானம் பிறக்கும்!
கற்பனை ஊற்றெடுக்க கலைகள் தோன்றும்!
வீரம் விளைய வெற்றி பிறக்கும்!
எத்தனையெத்தனை சிறகுகள்?!

காம கோப கடுஞ் சொல்!
வெறுப்பு! பிடிவாதம்!
கவலை! கழிவிரக்கம்!
எல்லாம் கடும் விலங்குகள்!

கல்வி! பொருள்!செல்வம்!
மகிழ்ச்சி! கருணை! இரக்கம்!
ஈதல்! கொடை! அறம்!
எல்லாம் வலிய சிறகுகள்!

வானில் பறக்க உதவும் அலகுகள்!
வாழ்வின் முனைப்பாய் வரும் தருணங்கள்!
விதித்தன செய்தலும்
விலக்கியன ஒழித்தலுமே விரியும் சிறகுகள்!



கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# அழைத்துச் செல்லுங்கள்

என்னையும் அழைத்துச் செல்லுங்கள்
உங்கள் விரல்களை பிடிக்கவே காத்திருக்கிறேன்.
உங்களுடன் என்னையும் அழைத்துச் செல்லுங்கள்.

சிறு நெடி உங்கள் விரல்கள் நலுவினால்
நான் பல யுகங்கள் பின்தங்கி விடுகிறேன்
அங்கேயே உறைந்து விடுகிறேன்.
தயவுசெய்து என்னையும் அழைத்துச் செல்லுங்கள்.

நான் தனியாக நடப்பவன் கிடையாது.
என்னால் தனித்து நடக்கவும் முடியாது.
என்னையும் கூடவே கூட்டிச் செல்லுங்கள்.
விட்டுவிடாதீர்கள்.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# மிருதனின் கோபம்

மலிவாகப்
பிறப்பதால் தான்
மதிப்பிழக்கச் செய்கிறது
மிருதனின் கோபம்.



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# விழு அழாதே எழு

ஓடு ஓடும் வரை
ஓயாமல் ஓடு
தேடு தேடுவதை
நிறுத்தாமல் தேடு
இடையூறு வரலாம்
இடர்களும் வரலாம்



தடையாய் கற்களில்
இடறி விழலாம்
விழு விழுந்ததை
எண்ணி அழாதே
வீறு கொண்டு எழு
மீண்டும் ஓடு

இலக்கை அடையும் வரை
நிற்காதே யோசிக்காதே
காயங்கள் கண்டு
கலங்கி விடாதே
வாகை சூடினால்
மாயமாகும் காயங்கள்

இலக்கை எட்டிவிட
விழுந்ததோ அழுததோ
காயமோ எதுவும்
நினைவில் நிற்காது
மகிழ்ச்சிப் பெருக்கே
பெருக்கெடுத்து ஓடும்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# தனித்துப் போனேன் உன் தயவில்லாமல்

நம்பிக்கை தனை
நன்றாகக் கொடுத்தாய்
தும்பிக்கை போல
துணையாக நம்பினேன்

உள்ளத்தில் உணர்த்தி
உயிராய் தொடர்ந்தேன்
கள்ளத்தனம் கொண்டு
கடந்து செல்கிறாய்

பள்ளத்தில் புதைத்த
பாசம் உனக்காய்
வெள்ளத்தில் தள்ளி
வேதனை தருகிறாய்



இனித்த கரும்பாய்
இன்பம் அளித்தாய்
கனிந்த பழமாய்
கனிச்சுவை ஆனாய்

விரித்த மனதில்
விடையின்றிப் போனாய்
பறித்த காதலை
பரிதவிக்க விட்டாய்

தனித்துப் போனேன்
உன்தயவு இல்லாமல்
பனித்த விழிகளால்
பார்த்து மனம் குமுறுகின்றேன்

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி

# நாணத்தின் நளினங்கள்



மெட்டி ஒலியின்
சத்தம் ஊடுருவி உறக்கத்திலே
உலாப்ப்போகுது

இமைகள் பிரியாத
ரசிப்பிலே இதழ் விரிந்த
புன்னகையில் சற்றே
வெட்கமும் கூடியது

விடியலுக்கு தாலாட்டாய்
அவளின் மெல்லிசை தென்றல்
இது ஒரு பேரானந்தம் தான்

நான் தலைதூக்கினால்
சுருங்கிக் கொள்வாள்
இறுக்கப் பூவை வேகமாக
சூடிடுவாள்

அவளின் பிடிக்கரனைக்
குழம்பிற்கு நானடிமை
நாசிக்குள் நறுக்கென்று ஏறும்

சொருகிய முந்தானையை
இழுத்து கைத்துடைக்கும்
நொடிகள்

அங்கே விழிகளின்
சங்கமங்கள் பேசும் கதைகள்
சொல்லிலடங்கா உணர்வுகள்

போதுமே இந்த சொர்க்கத்தின்
நிமிடங்கள்
அவளின் கோபத்திலும் மலரும்
காதல் பூக்களை
நான் அள்ளி அணைத்திடுவேன்

அவளின் மொழியில் மனதும்
சிறகை விரிக்கும்
புதிய கீதம் படிக்கும் துள்ளலில்
விசில் பறக்கும்

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

# கவிதையோடு கலந்து

உதிரத்தில் ஊறும் உணர்வுகளை நாளும்
மெல்ல வடுகட்டி,மெல்லினக் கொடுகட்டிய
உள்ளத்தின் உருமாறிய வார்ப்புகள்
உயிரில் கலந்த இக்கவிதைக் கோப்புகள்

ஆயுள் முழுதும் அலங்கரிக்க - நான்
தீட்டும் அரிச்சுவடி ஓவியம் - சிலநேரம்
மாயங்கள் கொண்டு மயக்கம் தரும்
படிக்க இனிக்கும் இருவரிக் காவியம்

எண்ணங்கள் முழுதும் எடுத்து நிரம்பி
எங்கெங்கோ நானனுப்பும் ஏவுகணை இது
காலங்கள் தாண்டியும் கனவுகளை
காவல் செய்யும் இதற்கு ஈடு இணையேது



இருளடைந்த நாட்களுக்குள் புகுந்து
இன்னிசையோடு பூசும் வண்ண சாயம்
இன்ப வரிகள் முடிய முடிய மெல்ல
மடியும் மறையும் நாள்பட்டக்காயம்

இப்போதெல்லாம் காணாமல் போகத்தான்
விரும்புகிறேன் கவிதையோடு கலந்து

கவிஞர் சி. நந்தினி

# மலர் மாதுளை

கன்னமது வெள்ளிக் கிண்ணமென
ஒளியே தருவால் மலர்கை விரல்கள்
விருந்தை படைப்பாள் பண் பாடிடும்
கண் பார்வைகள் வில்லெந்திடும்
பெண் விழிகள் மலர் மாதுளையே!

அங்கமதில் சங்கத்தமிழ்
நீதான் தருவாய்
மணம் வீசிடும் மலர் வாடையில்
மனம் நொந்தது வேதனையோ!



கன்னி இப்பொ காவல் தடுப்பா
கன்னத்துல முத்தம் கொடுப்பா!

அம்மாடி பூச்சாண்டி வாராண்டி
கண்ணுக்குள் என்னை நீ
காப்பாத்தேன்டி
அடி ஓட சத்தம் போல
நெஞ்சில் சத்தம் போடுற
நீ தூர நின்னு
என்ன பாத்தா
காதல் பூமழை!

நீ ஓடிவந்த வெண்ணிலவு
விக்கல் வந்தா
உன் நினைவு!

கவிஞர் கோ. ஜோன்குமார்

## (டெல்லி கணேஷ் அவர்களின் மறைவு 09-11-2024)

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து நான்காமாண்டு
ஆகத்து ஒன்றில் நெல்லையில் தோற்றம்!
அகவை இருபது முதல் முப்பதுவரை
இந்திய வான்படையில் கார்ப்போரலாக பணியாற்றல்!
நாடகத்தில் நாட்டம்! காத்தாடி ராமமூர்த்தியால்
நாடகக் குழுவில் இணைந்தார் தில்லியில்!
பட்டினப் பிரவேசம் நாடகத்தில் சிறப்பான
நடிப்பினால் திரைத்துறையில் பிரவேசம்! இயக்குநர்
பாலச்சந்தர் எழுபத்தேழாம் ஆண்டில் அதனையே
எடுத்தார் திரைப்படமாய்! டெல்லிகணேஷ் அறிமுகம்!
தொடங்கிய திரைவாழ்வு தொடர்ந்தது இறுதிவரை!
குணசித்திர வேடங்களில் மின்னிய நடிகரிவர்!
கமலுடன் இணைந்து கலக்கினார் நகைச்சுவையில்!
வில்லனாய் மிரட்டியது அபூர்வ சகோதரர்கள் !
சிந்துபைரவி, நாயகன், ஆஹா, தெனாலி,
அவ்வை சண்முகி, மைக்கேல் மதன காமராஜன்
அவரது பெயர் சொல்லும் திரைப்படங்கள்!
நானூறுக்கும் மேற்பட்ட படங்களில் அவரது
தனித்துவமான நடிப்பால் தனியிடம் பிடித்தாரே!
எந்தவொரு வேடத்திற்கும் பொருந்துகின்ற நடிகரிவர்!
எளிமையாய் வாழ்ந்து எளியோருக்கு உதவியவர்!
எட்டுக்கும் மேற்பட்ட தொடர்களில் நடித்து
சின்னத் திரையிலும் மின்னிய நடிகரிவர்!
தமிழ்நாடு அரசின் சிறந்த நடிகருக்கான
விருதினைப் பெற்றார் 'பசி' திரைப்படத்தால்!
கலைமாமணி விருதும் பெருமை சேர்த்ததுவே!
அடியுளத்தில் குடிகொண்ட எழுத்தார்வம் தன்னாலே
பெருந்தொற்றுக் காலத்தில் விளைந்தன படைப்புகள்!
பிள்ளையார் சுழி, டெல்லி தர்பார், ஆல் இன் ஆல்
அனுபவங்கள் இம்மூன்று படைப்புகளும் சிறந்தவையாய்!
பாரதியின் பாடல்கள் பலவும் அத்துப்படி!
பன்முகத் திறன்வாய்ந்த வற்புதக் கலைஞவர்!
நவம்பர் ஒன்பதில் நமைவிட்டுப் பிரிந்தாரே!
டில்லிகணேஷ் அவர்களின் ஆன்மா சாந்தியடைய
எல்லோரும் வேண்டுவமே! நிலைக்கட்டும் அவர்புகழும்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# வரலாற்று நாட்கள்

ஏற்றத்தாழ்வு இல்லாத இனிமையான நாட்கள்
அன்பை கொடுத்து அன்பைப் பெரும் அற்புத நாட்கள்

ஏழை பணக்காரன் இருப்பவன் இல்லாதவன் பாரபட்சம் பார்க்காத
இதய அன்பு ஒன்று சேர்ந்த புனிதமான நாட்கள்.

சிறுபான்மை பெரும்பான்மை என சிக்காத நாட்கள்
*சந்தனக்கூடு* விழாவில் அப்பாவோடு நானும்
குடும்பமாய் சென்று வரும் நாட்கள்.

*வாப்பாவோடு* நண்பனும் கோவில் திருவிழாவில்
உறவு சொல்லி உயிராய் ஒன்றாய் சுற்றிட்ட நாட்கள்.

ஆசிரியர்கள் பெரியோர்கள் போற்றி வணங்கிட்ட நாட்கள்.
ஆகாயம் வரை ஆசை வளர்த்து கனவுகளை
நிஜமாக்க உழைத்திட்ட நாட்கள்.



வாழும் காலம் யாவுமே தாய் தந்தை தெய்வமாய்
நெஞ்சில் ஏற்றி காத்த நாள்.

அந்த நாள் வாழ்க்கையும் பண்பான வாழ்வியலும்
எந்நாளும் மறவாத இனிமை நிறைந்த *வரலாற்று நாட்கள்*
வாழ்க்கையை வளப்படுத்திய நாட்கள்.

கவிஞர் ஜேப்பி. பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

மரத்தின்
பிராணயாமம்
அறிய
தோட்டத்துக் கதவுகள்
திறக்கப்பட வேண்டும்



பொதுவாகப்
பெய்கிறது
மழை என்றாலும்
நனைதல்
பெரும்பாலும்
பறவைகளுக்கே
வரமாகிறது

வார்த்தைகள்
செயல்கள்
தாண்டி
உள்நோக்கமே
பாவ புண்ணிய
காரணம்
சுமக்கிறது

மேடை இல்லை
ஆட்களும் இல்லை
செவிகள் தாங்கும்
கம்பியிலா
தொழில்நுட்ப
தொடர்பியலில்
நடைப்பயிற்சி
பேச்சாளர்கள்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

## ஆண்டாள் 027

## நாச்சியார் 9வது திருமொழி

"சிந்துரச் செம்பொடியே "
(திருமாலிருஞ் சோலையின் அழகர்தம் அனுபவமே)
ஐந்தாவது பாசுரத்தே ஓங்குமலர் சோலைசூழ் திருமாலிருஞ்
சோலையில் நின்றகோல தாமரைபோல் சிவந்தகண்ணும்
காளமேக வடிவழகும் கொண்டபெருமான் வடிவொத்த
மலர்மேல்வாழ் வண்டினமே அம்சுனையே செந்தாமரை
நாண்மலர்காள் தன்புகலிடம் கேட்கின்றாள்! ஆறாவது
பாசுரத்தே நற்பரிமளம் மிகுபொழில்கள் கமழ்மணத்து
திருமாலிருஞ் சோலையில் வாசம்செய் பூர்ணகுணன்
அழகரான எம்பெருமான் தன்றனக்கு நூறுதடா
வெண்ணெயும் காரடிசில் வாயாலே சமர்ப்பித்தாள்
கோதையே! இன்றுமிகு செல்வத்தர் எம்பெருமான்
ஏற்பாரோ? என்றையம் கொண்டிட்டாள்! ஏழாவது
பாசுரத்தே தென்றல்மணம் வீசுகின்ற திருமாலிருஞ்
சோலைவாழ் அழகர்தாம் வந்திருந்து அமுதுசெய்தால்
என்னிதயத்து நித்யவாசம் செய்தானேல் தடாவொன்றோ
நூறாயிரம் சமர்ப்பித்தே கைங்கர்யம் பலவகையும்
செய்வதாக தன்விருப்பம் சாற்றுகிறாள்! எட்டாவது
பாசுரத்தே கரியகுருவி கூட்டமெலாம் விடியுமுனே
திருமாலிருஞ் சோலைதன் தலைவரென துவாரகைதன்
அரசரென ஆலிலைவளர் எம்பெருமான் என்றெல்லாம்
வரவு சொலும் மருள்பண்ணை பாடுகின்றனர்!
உண்மையில் நிகழ்ந்திடுமோ என்றெதிர்பார்த் தேங்குகிறாள்!
ஒன்பதாவது பாசுரத்தே கோங்குமர திருமாலிருஞ்
சோலைமலை கொன்றைமேல் தொங்குபொன்னிற
பூமாலை போல்யானும் பயனின்றி உள்ளேனே!
பவளயிதழ் சங்கொலியும் வில்லதனின் நாணோசை
அண்மிப்பது எந்நாளோ? என்றேக்கம் கொள்கின்றாள்!
பத்தாவது பாசுரத்தே பலனுரைப்பாள்! கோதைதன்
செந்தமிழ்ப்பா பத்துவல்லார் நாரணன்தாள் சரணடைவார்!
நாச்சியார்தம் ஒன்பதாவது திருமொழி முற்றிற்று!
பத்தாவது கார்க்கோடல் பூக்காள்தம் பத்தறிவோம்!



கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# உயிரானவன்

நான் சிணுங்கும் போது தாயாகினான்
நான் தவறிழைத்தால் ஆசானாகினான்
நான் மகிழ்ச்சியடைய கோமாளியாகினான்
நான் துன்பப்பட ஆறுதலாகினான்
நான் வெற்றி பெற ஆனந்தமாகினான்
நான் தோல்வியடைய நம்பிக்கை ஆனான்
நான் துயரப்பட தூண்டுகோலாகினான்
நான் நானாக இருக்க எல்லாமுமான என் உயிரானான்
என் உயிரில் கலந்த உறவானான்
அவனே நான் என்னும் என்னை
மாற்றிய உயிர்ப்பானவன்




கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# தூரிகை

நான் தூரிகை தான்
என்னில் தோன்றும்
யாவையும் வண்ணம்
கொடுக்க எண்ணங்களை
எழுத்துக்கள் சேர்த்து சங்கமம் செய்கிறேன்.

அதுவோ கிறுக்கல்
தாண்டி மெறுாகூட்டி
காட்டும் போதெல்லாம்
இறையோனை புகழ்கிறேன்.



சிலநேரம் என்னால்
எழுத முடியாத சோர்வு
என்னில் அப்பிக்கொள்ள
நானோ இன்னுமின்னும்
சோர்கிறேன்.

எனது மூச்சாகி போன
கவி பயணமோ
பாதியோடு தடையாகிடாது
போகவே பிரார்த்தனை
செய்கிறேன்.

கவிஞர் சுஹ்னாஸ் பேகம், இலங்கை

"கவிமாமணி" இரஜகை நிலவன்
அன்பி(ல் ) மாற்றம் பேசிடும் கதைகளின் பேரின்பம் பகர்ந்திட

அருமை வரிகளில் கவி படைத்தமைக்கு குழுவின் சார்பில் நன்றியும் நல்வாழ்த்துக்களும் கவிஞரே!

ஆன்மீக லட்சுமி

**********************

இக்கவிஞர் ஒரு புதிய பாரதியாகவே, இக்காலப் பாரதியாகவே காட்சி தருகின்றார். இவரது இப்பாடல் தொகுப்பிற்கு அணிந்துரை எழுதக்கிடைத்த வாய்ப்பைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

"இவர் இன்றைய பாரதியே" எனக் கூறி மகிழ்வுறுகிறேன்.

இப்படிக்கு
அந்தோணி ஜேம்ஸ் பெர்லாமின்

*********************************

சிறப்பு!

கண்டாங்கிச் சீலயில
கருநீல கொண்டயில
கருகமணி மாலையில
கன்னி நிக்கயில

சாஞ்ச பார்வயில
சாளர நெனப்பெல்லாம்
சாய்ந்தாடும் ஊஞ்சலில
சாயங்கால வெயிலாவ.



நல்ல கற்பனை
வாழ்த்துகள் கவியே.

சுரேஷ் கவி பாரதி
*********

சிறப்பு ஐயா!

இயற்கையின் எழில் கூறும் கவிதை அழகு!

சபீனா சபி



## நூல் அனுபவம்

## கவிதைத் தொகுப்பு

**கி.கவியரசன் ; முதல் பதிப்பு செப்டம்பர் 2024**
**பக்கம் 120; விலை ரூ 150 ; வெளியீடு மெளவல் பதிப்பகம்**

**இயற்கைவெளியில் தன்னைத் தேடும் பசித்த கனவுகளென..**




கவிதை மனதை சுருக்கெனத் தைத்திடும் கூர்வாளென்பான் மாகவி. காலவெளியில் தான் கண்ணுறும் காட்சிகளின் வழியே தனது இருப்பை ஆணித்தரமாக அடையாளப்படுத்த முனைந்து வரிகளுக்குள் தன்னையே ஒப்படைத்துக் கொள்பவன் கவிஞனாகிறான். சூழலின் நிகழ்வுகளுக்குள் தன்னைக் கரைத்தபடி உண்டாகும் கோபத்தையும் களிப்படையும் தருணத்தையும் உணர்வாக்கி எழுத்தின் வழியே நம்மை இளைப்பாற வைத்துவிடும் அவனது வரிகள் சமயங்களில் நமக்குள் சமூகத்தையும் காட்சிப்படுத்திவிடுகிறது.

அன்றாட வாழ்வின் நிகழ்வுகளில் நடந்தேறும் பலவித நிகழ்ச்சிகளையும் அதன் காரணகர்த்தாக்களாகத் திகழும் எளிய மனிதர்களின் மனங்களையும் இரவெல்லாம் வெயில் சுமந்து வந்து வெளிச்சப்படுத்துகிறது.

பலவித மனிதர்களும் காலச் சூழலில் வாழ்வை பெருங்கொண்டாட்டமென அமைத்திட வழிவகுக்கும் குழந்தைகளின் மனமும் நாம் தொலைத்துவிட்ட கிராமத்தின் பசுமையையும் அதன்வழியே பெருகி வழிந்தோடும் காதலின் இன்பத்தையும் வாசல் வரை வந்து வழியனுப்பும் கடவுளின் தோழமையும் நூல் முழுக்க நிரம்பி வழிகிறது.

வானத்தை எட்டும் முயற்சிகளில் தான் வாழ்வின் நகர்தல் சுவாரசியமாகிறது குழந்தைகளும் பலூன்களும் கொடுத்திடும் குதூகலம் எப்போதும் இரட்டிப்பு மகிழ்வை ஏற்படுத்திவிடுகிறது என்பதையே நூலின் முதல் கவிதை

"பூமியிலிருந்து வானத்திற்கு
குதிக்க போராடிக் கொண்டிருக்கின்றன
கையில் இருந்த பலூன்கள்" நமக்கு எடுத்துக் கூறுகிறது

புகழ் மாலைகள் பெருகும் போதும் உயரப் பறந்து சிகரத்தை எட்டும் போதும் எல்லா மனமும் தாய்மடியைத் தான் தேடி இளைப்பாறிக் கொள்ள விரும்புகிறது. உலகிற்கே இசை கொடுத்து உயிர்ப்பிக்கும் குழலுக்கும் தன் பிறப்பிடத்தை அடைவது பேரின்பமாகிப் போகிறது.

"தன் மீது இசை மீட்கும்
இரகசியம் அறிந்த கரங்களைத் தேடவில்லை
தன் காயங்களுக்கு மருந்திட்டு
மீண்டும் தன்னை மூங்கிலாக்கும்
அதிசயமறிந்த கரங்களைத்தான் தேடுகின்றது
அந்த புல்லாங்குழல்" என்ற கவிதையில் எல்லைகள் தாண்டிப் பறந்தாலும் இருப்பிடத்தின் சொர்க்கத்தை எல்லோரும் உணர்ந்திடுவர் என்பதை கவிதை வெளிப்படுத்தி விடுகிறது.

வாழ்வெனும் கவிதையை வாசிக்க நினைப்பவர்களும் எழுத நினைப்பவர்களும் எப்போதும் நினைவில் கொள்ளட்டும் அவரவர் மனங்களில் அழுக்கு சேராமலும் அடுத்தவர் மனங்களை காயப்படுத்தாத நேசமும் நிரம்பி இருக்கும் வாழ்வை கவிதை என மலர வைத்து விடும் போக்கை விவரிக்கிறது பின்வரும் கவிதை.

"எத்தனையோ
அடித்தல் திருத்தல்களுக்கு பிறகு
நிறைவு பெறும் போது
பொருளில் மட்டும்
பிழைகள் வராமல்
பார்த்துக் கொள்ளுங்கள்

கவிஞர் இளையவன் சிவா

"வானளவு பறக்க நினைக்கும் பட்டங்களுக்கு
கிடைப்பதெல்லாம்
நூலளவு சுதந்திரம்" இக்கவிதையே நூலின் ஆகச்சிறந்த கவிதையென ஒளி வீசுகிறது. கட்டவிழ்த்துவிடப்பட்ட சுதந்திரம் பல சமயங்களில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி விடுகிறது.

"மழையிலும் மாற்றமில்லை
வெயிலிலும் மாற்றமில்லை
ரசனையில்தான் ஏற்படுகின்றன
பருவ கால மாற்றங்கள்" - பக்கம் 36

பொதுப் போக்குவரத்தின் பயன்பாடு சாலையைப் புரிந்து கொண்டு வாகனம் இயக்குபவரிடம் உள்ளது. சாலையே தனக்கு சொந்தம் என அளக்க நினைக்கும் அவசரங்களால் நிறையக் குடும்பங்களின் நிம்மதி குலைந்து விடுகிறது என்பதை எச்சரிக்கிறது

"மனதால் வானத்தில் பறக்கலாம்
வாகனம் பறக்காதென
யார் சொல்வது
சாலைகளின் மீது
அவ்வளவு
கோபம் கொள்பவர்களுக்கு" என்ற வரிகள்.

"அனைத்து குட்டிகளுக்கும்
ஒரே நேரத்தில்
பாலூட்டும்
தாய்ப்பன்றிக்கு
எப்படியோ தெரிகிறது
ஒவ்வொன்றுக்குமான
பசியின் அளவு" -பக்கம் 44

"கையைப் பிடித்து
தரிதரவென
இழுத்துச் செல்கிறது
சிரமத்தைக் கொடுக்கிறது நிர்ப்பந்திக்கிறது
மயக்க மருந்து கொடுக்காமல்
அறுவை சிகிச்சை
செய்வது போல் உள்ளது
தலைப்பிற்கு
கவிதை எழுதுவது" எண்ணச் சிறகுகளை பரந்து விரியும் வானத்தில் பறக்க விடுங்கள். கூண்டுக்குள் அடைத்து வைப்பது போல கொடுமை வேறில்லை. கவிதையும் அப்படியே தலைப்புக்குள் தன்னை ஒருபோதும் அடைத்துக் கொள்வதில்லை.

"வலியோ
ஏமாற்றமோ
ஏக்கமோ
ஏதுமில்லை
இந்த காற்றின் மேல்
எத்தனை சுகமாக நடக்கிறது
முழுவதும் சரணடைந்துவிட்ட
ஒரு இலையின் மரணம்" வாழ்வின் பரிபூரணத்தைப் பேசும் மரணத்தை மனிதர்கள் எப்போதும் அஞ்சியபடியே எதிர் கொள்கின்றனர். இயற்கை வசம் தன்னை ஒப்படைத்து விட்ட துறவு மனம் மனிதனுக்கு எப்போதும் வாய்ப்பதில்லை. ஆறறிவு மனிதனுக்கு இலை சொல்லும் இந்தப் பாடத்தில் நிறைந்திருக்கிறது போட்டி பொறாமை துறந்த புதியதொரு வாழ்வு.

"அவ்வளவு பாறைகளையும் வளைவுகளையும் தாண்டி
மிதந்து வந்து
கரை ஒதுங்கியது
ஒரு இலை
பெருமூச்சு விட்டபடி

கவிஞர் இளையவன் சிவா

"பொம்மைகளுக்காக
அழுத குழந்தை
பொம்மைகளுக்கு மத்தியில்
அம்மா அம்மாவென
மீண்டும் அழுகிறது" பக்கம் 99

"குழந்தைகள்
கண்ணாடிகளாக
மாறி விடுகிறார்கள்
அவர்களின் முன்
யார் வந்து நின்றாலும்
குழந்தைகளாக
மாறி விடுகிறார்கள்" - பக்கம் 119

தனக்குக் கிடைத்திருக்கும் வாழ்வில் கிடைத்திடாதவற்றை எண்ணி வருந்தாமல் போதாமைகளை எண்ணிப் புலம்பாமல் இருப்பதில் நிறைவைத் தேடி முன்னேறத் துடிக்கும் மனிதர்களின் இருப்பை உறுதி செய்கின்றன இந்நூலின் கவிதைகள். வாசிப்போரின் மனதினுள் காலத்தைக் கோடிட்டுக் காட்டி கவிஞன் அறிமுகப்படுத்தும் எல்லா மொழியிலும் ஒளிந்திருப்பது அவரவர் வாழ்வின் இருப்புதான் என்பதை கண்ணாடியாக்கி விடுகிறது கவிதைகள். தன்னை இயற்கையாகவே எண்ணிக்கொண்ட கவிமனம் தானும் எல்லோருக்கும் பயன்படும்வகையில் இயற்கையாகவே மாறிப்போய்விடுகிறது.இயற்கையின் மீதும் சக உயிர்களின் மீதும் பேரன்பு கொண்ட மனதினில் இரவெல்லாம் வெயில் இன்னும் நிறைய சிந்தனைகளை விதைக்கட்டும்.

(பிகு. ஒற்றுப்பிழைகள் வார்த்தைகள் சேர்த்து எழுதாமல் தனித்து நிற்றல் போன்ற சில குறைகளைக் களைந்திருப்பின் வாசிப்பில் ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தவிர்த்திருக்கலாம்.)

கவிஞர் இளையவன் சிவா

# முனைவர் ச.அகத்தியலிங்கம்

## கட்டுரை

ச.அகத்தியலிங்கம், கன்னியாகுமரி மாவட்டம். நாகர்கோயில் அருகிலுள்ள கேசவன் புதூரில், சண்முகம் (பிள்ளை) - அருணாசல வடிவு இணையர்க்கு மகனாக 1929ஆம் ஆண்டு ஆகத்து 19 ஆம் நாள் பிறந்தார்.

### கல்வி:



அகத்தியலிங்கம், நாகர்கோயில் இந்துக் கல்லூரியில் இளங்கலைப் (அறிவியல், கணக்குப்பாடம்) பட்டம் பெற்றார். பின்னர், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, முதுகலைத் தமிழ் இலக்கியம் பயின்றார்; இங்குப் பயிலும்போது, இலக்கியச்செல்வர் குமரி அனந்தன் இவரின் நெருங்கிய நண்பரானார். கேரளப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பேராசிரியர் முனைவர்வ. ஐ. சுப்பிரமணியன் மேற்பார்வையில் மொழியியல் துறையில் ஆய்வு செய்து, 'முனைவர்' பட்டம் பெற்றார்; பின் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள இந்தியானாப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து, மற்றுமொரு 'முனைவர்' பட்டம் பெற்றார்.

முதன் முதலாகத் தாம் பயின்ற இந்துக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இவர் பின்னர்த் தில்லிப் பல்கலைக்கழகத்தில் சிறிது காலம் இணைப் பேராசிரிராகப் பணியாற்றினார்; 1968 ஆம் ஆண்டு முதல் 1989ஆம் ஆண்டு வரை சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல்துறைப் பேராசிரியராகவும் இயக்குநராகவும் பணிபுரிந்தார்; அங்குத் தமிழ்த்துறையின் புல முதன்மையாளராகவும் பொறுப்பேற்றுச் செயலாற்றினார்; பின், சிகாகோ பல்கலைக்கழகத்தில் வருகைதரு பேராசிரியராக மூன்றாண்டுகள் பணியாற்றினார்.

இவர், தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக 01.12.1986 முதல் 30.11.1989 வரை மூன்றாண்டுகள் பணியாற்றினார். சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் வருகைதரு ரோசிரியராகப் பணிபுரிந்துள்ளார்; பின்னர், மைசூர்ச் செம்மொழி நிறுவனத்தில் முதுநிலை ஆய்வறிஞராகப் பணியாற்றினார்.

ச.அகத்தியலிங்கனார், உலகின் பல்வேறு பல்கலைக்கழங்கள், மொழியியல் அமைப்புகள், தமிழ் அமைப்புகள் ஆகியவற்றில் பல பொறுப்புகள் ஏற்றுத் திறம்படச் செயலாற்றினார். 'அனைத்திந்திய மொழியியல் கழகத்தை' உருவாக்கியவர்களுள் ஒருவர்.

**பெருமைகள்:**




முனைவர் ச.அகத்தியலிங்கனார், ஓய்வுபெற்ற பின்னரும் தம் இல்லத்தில் இருந்து கொண்டு, பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டார். அவற்றைக் கட்டுரைகளாக வெளியிட்டார்; உலக நாடுகள் பல இவரை அழைத்துப் பெருமை பெற்றன; மேலும், இவர் இறுதியாகச் சிங்கப்பூர் சென்று, ஆய்வரங்கில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிப் பெரும்புகழ் பெற்றார்; இவர், தமிழ் நாட்டரசின் 'திரு.வி.க.' விருது உட்கொளப் பல பெருமைகளைப் பெற்றார்.

**மறைவு:**

இவர், புதுச்சேரி அருகே கிளியனூர் அருகே நடைபெற்ற மகிழுந்து மோதலில் சிக்குண்டு, 2008 ஆகத்து 4 ஆம் நாள், நிகழ்வு நேர்ச்சி இடத்திலேயே இறந்தார். இவர் துணைவியார் பொன்னம்மாள் மருத்துவமனையில் இறந்தார்; இவரின் மகள்கள் சண்முக சுந்தரி. அருணாசல வடிவு ஆகிய இருவரும் சென்னைப் பல்கலைக்கழகத்தில், பேராசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர்.

சிறப்புகள்:

- முனைவர் ச.அகத்தியலிங்கனார், தமிழ் நாட்டின் தலைசிறந் தமிழ் - மொழியியல் அறிஞர்களுள் குறிப்பிடத் தக்கவர்.
- கேரளப் பல்கலைக் கழகத்தில் மொழியியலில் 'முனைவர்'பட்ப பெற்றார்.
- ஐக்கிய அமெரிக்காவிலுள்ள இந்தியானாப் பல்கலைக்கழகத்தி மற்றுமொரு 'முனைவர்' பட்டம் பெற்றார்.
- தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர்.
- சிகாகோ பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார்.
- உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றினார்.
- மைசூர்ச் செம்மொழி நிறுவனத்தில் முதுநிலை ஆய்வறிஞராகச் செயலாற்றினார்.
- உலகப் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் பல பொறுப்புகளை ஏற்றுத் தமிழின் சிறப்பை வெளிப்படுத்தியவர்.
- அனைத்திந்திய மொழியியல் கழகத்தை உருவாக்கியவர்களுள் ஒருவர்.
- தமிழில் 24 நூல்கள் எழுதியுள்ளார். ஆங்கிலத்தில் 9 நூல்கள் எழுதியுள்ளார்.
- 200க்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் படைத்துள்ளார்.
- இவரின் படைப்புகள் யாவும் மொழியியல், சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் பற்றியன. சங்க இலக்கியம் குறித்துச் 'சங்கத்தமிழ்' என்னும் பெயரில் 5 நூல் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். உலகமொழிகள் என்ற வரிசையில் 7 தொகுதிகள் வெளி வந்துள்ளன.
- தொல்காப்பியம் பற்றி 3 தொகுதிகள் எழுதி வெளியிட்டுள்ளார்.

நன்றி

தகைசால் தமிழறிஞர்கள், புலவர் சுப்பு. இலட்சுமணன், மாணிக்க வாசகர் பதிப்பகம்


அகர முதல இலக்கியப் பேரவை
நாளை
நமதே
சில நேரங்களில்
பின் வைத்த காலும்
வெற்றி தரும்
அகர முதல இலக்கியப் பேரவை
Aagaramuthalaa
www.aagaramuthala.com
aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com